FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

This Question Paper consists of 37 questions [Section–A (19) + Section–B (9+9)] and 5 printed pages.
5 பக்கங்களை கொண்ட இவ்வினாத்தாளில் 37 வினாக்கள் உள்ளன. [பகுதி அ-(19), பகுதி ஆ-(9 +9)]

Roll No. | | | | | | | | | | | | |

கோட் **56/SS/A/TM**

**Set/**செட் **A**

# ( தமிழ் )
# ( TAMIL )
# (304)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ..............................................................

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : 1. ..............................................................

2. ..............................................................

---

*பொதுக்குறிப்புகள் :*

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
4. உங்களது வினாத்தாளின் எண்ணை (கோட் 56/SS/A/TM மற்றும் செட் A என்று) வினாத்தாளில் எழுதுங்கள்.



www.FirstRanker.com

( தமிழ் )

( TAMIL )

(304)

காலம்: 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

குறிப்பு : (i) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(ii) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(iii) பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப்பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப்பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(iv) வினாவிற்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி—அ

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ஒரிரு சொற்களில் விடை தருக: 1×17=17

**1.** உயிரினும் மேலானது எது? 1

**2.** எங்கள் தாய் என்று பாரதியார் குறிப்பிடுவது யாது? 1

**3.** 'சிறைகள்' கவிதையில் பேருந்து எதை நோக்கிச் சென்றது? 1

**4.** பாரதியார் தம் கவிதையில் வஞ்சனைப் பேய்கள் எங்கு எங்கு உள்ளதாக மக்கள் எண்ணிப் பயப்படுவர் என்கிறார்? . 1

**5.** புள் - என்ற சொல்லின் பொருள் யாது? 1

**6.** மசுதான் சாகிபு எதனைக் கண்டு மகிழ்ந்திட வேண்டுகிறார்? 1

**7.** தொல்காப்பியம் எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தது? 1

**8.** 'கதவு' சிறுகதையில் தலையாரித் தேவரின் செயல்பாடுகள் எத்தகையவை? 1

**9.** இசையை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? 1

**10.** திருப்பாவை பாடியவர் யார்? 1

**11.** இராசாத்தி செய்த வேலைக்குக் கந்தன் கொடுத்த ஊதியம் யாது? 1

**12.** வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை – சான்று தருக. 1

**13.** கோவில் – இச் சொல்லில் இடம் பெற்றுள்ள உடம்படுமெய் ...... ஆகும்.. 1



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**14.** விகாரப் புணர்ச்சி ...................... வகைப்படும். 1

**15.** கடி - இலக்கணக் குறிப்பு தருக. 1

**16.** ஊரின் நீங்கினான் என்பது .......... வேற்றுமை விரி ஆகும்.. 1

**17.** DATABASE - இச் சொல்லின் தமிழ்ச்சொல் .............. ஆகும்.. 1

**18.** (அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்: 4×3=12

*(i)* குழந்தையின் எந்த நிலைகள் தாயின் மனதில் துன்பத்தை ஏற்படுத்தும்?

*(ii)* காலம் அறிதலின் தேவையை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

*(iii)* கண்ணம்மாவைப் பாரதி எவ்வாறு உருவகிக்கிறார்?

*(iv)* திருநாவுக்கரசர் ஏன் எமனுக்குப் பயப்பட மாட்டார்?

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் : 4×3=12

*(i)* ''கதவு'' சிறுகதையின் மையக் கருத்து யாது?

*(ii)* ஏறு தழுவுதல் என்றால் என்ன?

*(iii)* சிற்றிலக்கியங்கள் குறிப்பு வரைக.

*(iv)* சித்த மருத்துவம் பற்றி எழுதுக?

(இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும் : 4×2=8

*(i)* நூல் நிலையங்களின் பயன்கள் யாவை?

*(ii)* வேலை வேண்டி விண்ணப்பம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

*(iii)* இராமலிங்கர் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?

www.FirstRanker.com

**19.** குறிப்பு : ஒரு பக்க அளவில் விடையளிக்க:

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க : 6×2=12

*(i)* வலியறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

*(ii)* நாமார்க்கும் என்ற பாடலின் கருத்துரையை எழுதுக.

*(iii)* சிறைகள் - என்ற புதுக் கவிதையின் வழியாக இன்குலாப் கூறும் தொலை நோக்குத் திட்டத்தை குறிப்பிடுக

*(iv)* பத்தியந்தரு பாடலில் அமைந்துள்ள உருவக அணியை விவரிக்க.



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க: 6×3=18

(i) வேலை கொடுத்தவன் சிறுகதையின் அமைப்பினை விளக்குக.

(ii) சென்னை நகரில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை விவரிக்க.

(iii) கலைவளர் திருநாள் தமிழர் திருநாள் என்பது பற்றி எழுதுக.

(iv) தமிழ் மொழியின் தனித்தன்மை பற்றி எழுதுக.

(v) சித்த மருத்துவமே சிறந்த மருத்துவம் என்பதை விளக்குக.

(vi) நகைச்சுவையின் சிறப்பைத் தெனாலிராமன் கதை வழி எடுத்துரைக்க.

(இ) ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்கவும் : 6

(i) மொழியில் புதிய வழக்காறுகளைக் கையாள மேற்கொள்ளும் முறைகளை எழுதுக.

(ii) இராமலிங்கரின் பிழை பொறுக்கும் பண்புகளை எழுதுக.

பகுதி —ஆ

விருப்பப் பாடம்—I

( இணையமும் தமிழும் )

**20.** ஆரம்ப நாட்களில் தகவல் பரிமாற்றம் எப்படி நடந்தது? 1

(அ) மொழியின் மூலம்

(ஆ) கடிதம் மூலம்

(இ) உடல் மொழி

(ஈ) அச்சு ஊடகம் மூலம்

**21.** இணையத்தின் தாத்தா என்றழைக்கப்படும் இணைப்பு யாது? 1

**22.** சென்னை நூலகத்தின் இணைய முகவரி யாது? 1

**23.** MAIL GROUP - என்பதன் தமிழ்ச் சொல் என்ன? 1

**24.** ஆளில்லா நூலகத்தில் நூல் எடுக்க, புதுப்பிக்க என்ன குறியீடுகள் பயன்படுகின்றன? 1

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

*குறிப்பு:* ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க : 4

**25.** மின்னஞ்சலுடன் இணைப்புகள் அனுப்ப உதவும் முறை குறித்து எழுதுக.

**26.** சில முன்னணி டொமைன்கள் குறித்து எழுதுக.

*குறிப்பு:* ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க : 6

**27.** தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து எழுதுக.

**28.** அழைப்புச் சேவை மைய முகவரின் தகுதிகள் யாவை?

## விருப்பப் பாடம்—II

( மேலாண்மை இயலும் தமிழும் )

**20.** கடிதம் என்ற சொல்லின் பொருள் யாது? 1

**21.** மனிதவள நிர்வாகத்தின் முக்கியப் பணிகள் யாவை? 1

**22.** மேலாண்மைத் தகவல் தொடர்பின் மூன்று முக்கியக் கூறுகள் யாவை? 1

**23.** நிகழ்வுக் குறிப்பு முக்கியமானதா? 1

**24.** தொகுக்கும் திறனின் ஒரு பகுதியாக எதனைக் கூறலாம்? 1

*குறிப்பு :* ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க : 4

**25.** கட்டுப்படுத்துதல் என்றால் என்ன?

**26.** பேசுதல் தொடர்பை விவரி?

*குறிப்பு:* ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க: 6

**27.** நிறுவனங்களின் உயிர்நாடித் துறையாக இருப்பது எது? விளக்குக.

**28.** தொகுத்து எழுதுவதற்கு முன் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

★ ★ ★



www.FirstRanker.com